இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -12

# நேர்மை நெறி

டிசம்பர் 2021

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்) (Reg.No.349/2001)

## (NERMAI NERI)

Rs.10

செயற்பால தோரும் அறனே ஒருவற்க்கு
உயர்பால தோரும் பழி.

# ஊழல்வாதிக்குக் கொடுக்கும் மரியாதை நம் நாட்டின் சாபம்




PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.com

# தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே !**

**வணக்கம்.** இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**கோவிட்-19 எச்சரிக்கை**:-

கோவிட்-19 வைரசுக்கு தமிழகமும் இந்த நாடும் பல்லாயிரம் உயிர்களை பலி கொடுத்துவிட்டது! பலி கொடுத்துவருகிறது!!. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. தற்போது கோவிட்-19 வைரஸ் புதியதாக ஒமிக்ரான் என்ற பெயரில் புதி அவதாரம் எடுத்துள்ளது. இதன் பரவும் வேகம் அதிகம் என்பதும் கவலை அளிக்கிறது. எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19லிருந்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள, அரசு தடுப்பு ஊசியை இரு முறையும் உடனடியாக போட்டுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். தடுப்பூசி போட்டுக் கொண்டாலும் தொடர்ந்து அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுகிறோம்.

**தற்போதைய மழையும் சிங்கார சென்னையும்**:

மத்திய அரசு “ஸ்மார்ட் சிட்டி” என்ற பெயரில் ஆயிரம் கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டிருந்தும், உருப்படியாக எந்தப்பணியும், குறிப்பாக, மழை நீர் வடிகால் பணிகள் அறிவுப்பூர்வமாக கட்டப்படுவதில்லை. அந்த பணிகளின் மதிப்பீடுகளும் அறிவியல் பூர்வமாக தயாரிக்கப்படாமல், விரைந்து முடிக்க வேண்டும்; நிதி ஒதுக்கீடுகளை விரைந்து செலவு செய்ய வேண்டும்; அதன் மூலம் “கல்லா” கட்ட வேண்டும் என்பதே ஆட்சியாளர் முதல் அடிமட்ட பணியாளர் வரை கொள்கையாக நிலவுகிறது. இதற்கு ஒத்து வர மறுக்கும் அதிகாரிகள், ஓரம் கட்டப்பட்டு, எந்தவித அதிகாரமும் இல்லாத டம்மி (வெற்று) பதவியில் அமர்த்தப்பட்டு விடுவார்கள். வேறுவழியின்றி, உள்ளக்குமுறலுடன், தமது மனைவி மக்களின் எதிர்காலாத்தையும், அவர்களின் மூன்று வேளை பசிபோக்க வக்கற்றுப் போய்விடுமே என்று வாய்மூடி மௌனியாகிவிடுவார்கள். அல்லது, ஆட்சியாளர்கள் எதிபார்க்கும் வகையில் ஊழல் வழிக்கு சென்றுவிடுவார்கள். இது யாம் நெடுஞ்சாலைத்துறையில் 23 ஆண்டுகளுக்குமேலான பணியின் போது கண்கூடாக பார்த்து வந்த கொடுமை.

திறமைவாய்ந்த பொறியாளர்கள் தேர்வாணையத்தின் மூலம் தேர்ச்சி செய்யப்பட்டாலும், பணிகுறித்த ஒரு முழுமையான பயிற்சி கொடுக்கப்படாமல், துறையில் நுழைந்ததும், பதவியின் நிலை அறிந்து விதிமுறைகள் அறிந்து சுதாரிப்பதற்கு முன்பே, ஊழலில் ஊறித்திளைத்தவர்களின் வழிகாட்டுதலில் மூலம் தவறு செய்து, ஊழல் வலையில் தள்ளப்பட்டுவிடுகின்றனர். பின்னர், அறியாமல் செய்யப்பட்ட தவறுகளை சுட்டிக்காட்டியே, அந்த ஊழல் வலையிலிருந்து வெளியே வரவிடாமல் செய்யப்பட்டு, பின்னர் அவர்களும் அடிமையாகி விடுகின்றனர். இதுவே, கல்லூரியில் “ராக்கிங்” செய்வது போல், ஒவ்வொரு ஆண்டும் நியமிக்கப்படுபவர்கள், ஊழல் வலையில் விழுகின்றனர். இதன் இன்றைய பரிணாம வளர்ச்சி யாதெனில், இந்த மாநிலத்தின் ஒவ்வொரு துறையிலும் ஊழல் நீக்கமற நிறைந்துள்ளது.

மேலும், தற்போது, தேர்வாணையமும், சென்ற மடல்களில் எழுதியது போல, ஒவ்வொரு தேர்வுகளிலும், ஊழல் செய்து தகுதியற்ற- திறமையற்ற பணியாளர்களையே தேர்ந்தெடுத்து ஊழல்வாதிகளையே நியமிப்பது வாடிக்கையாகி, தமிழகமும் ஊழலும்

பிரிக்க முடியாததாகிவிட்டது. தமிழகத்தை மாறி மாறி ஆண்டு வரும் திராவிடக் கட்சிகள் தான் இந்த ஊழல் போக்குக்கு முழுக்காரணம். இந்த அவல நிலை மாற வேண்டுமாயின்:-

1. அனைத்து பணியாளர் தேர்வும் வெளிப்பபடையாக நடைபெற வேண்டும்;
2. அனைத்து வினாத்தாள்களும், விடைத்தாள்களும், தேர்வு எழுதியவுடனேயே, அந்தந்த தேர்வு மையத்திலேயே, இன்டெர்நெட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அனைவரும் பார்க்கும் வகையில், வெளியிடப்படின், விடைதாளில் எந்தக் குளறுபடியும் செய்ய இயலாது;
3. **“objective type”** தேர்வாயின், தேர்வு முடிந்தவுடனேயே, வினாக்களுக்கான விடைகளை வெளியிட வேண்டும்; தேர்வு முடிந்ததும், கணிணி மூலம் தானாகவே திருத்தப்பட்டு உடனடியாக மதிப்பெண்கள் பிரசுரிக்கப்பட வேண்டும்
4. இவ்வாறு செய்யப்படின், எழுத்துத் தேர்வில் முறைகேடு என்பது இல்லாத ஒன்றாகிவிடும்.,
5. அடுத்து அதிகமாக ஊழல் செய்யப்படும், நேர்காணல், முழுவதுமாக ரத்து செய்யப்பட வேண்டும். அவ்வாறு நேர்காணல் ரத்து செய்யப்படாவிடின், நேர்காணல் முற்றிலும் வீடியோ எடுக்கப்பட்டு பகிரங்கமாக வெளியிடப்பட வேண்டும். அப்போது ஊழல் தானாக ஒழியும்.
6. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டால் தான் நேர்மையான முறையில், பணி நியமனம் செய்யப்படுவர்களிடம் நேர்மையை எதிர்பார்க்க முடியும்.

ஆனால், இன்றைய, நிலையோ, ஊழல் செய்து பணத்தை கொடுத்துத் தான் அரசுப்பணிகளில் ஒருவர் நியமனம் பெற முடியும். அவ்வாறு அரசுப்பணியில் சேர்ந்தவர்களின், முதல் நோக்கமே, போட்ட பணத்தை எப்பொழுது எடுப்பது என்ற எண்ணமே மேலோங்கி நிற்கும். இது போன்ற எண்ணம் முற்றிலும் இயற்கையே. எனவே, தேர்வாணைய நடைமுறைகள், சீர்திருத்தப்பட வ்ண்டும். அதை நம் இயக்கம் கையில் எடுக்கும் காலம் கனிந்து விட்டது என்றே யாம் கருதுகிறோம். ஊழல் செய்த தேர்வாணைய தலைவர், ஊறுப்பினர்கள், மற்றும் பணியாளர்கள் மீது உரிய கிரிமினல் நடவடிக்கையும், தேர்வாணைய நடைமுறைகள் சீர்திருத்த நடவடிக்கையுமே நமது அடுத்த இலக்கு. இவ்விலக்கை நோக்கி அடுத்த நடவடிக்கையை, தங்கள் அனவைரின் ஒத்துழைப்புடன், இயக்கம் எடுக்க உள்ளது என்பதை தெரிவித்த்க்கொள்கிறோம்.

**ஒன்றுபடுவோம்! சட்டப்படி போராடுவோம்!! வெற்றிபெறுவோம்!!!.**

இவண்.
(ந.சுப்ரமணியன்)

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.</u>
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு NEFT மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**

**Savings A/C No: 000901000041657**

**<u>நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்</u>!**
*விளம்பரக்கட்டண விவரம்*
*முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.*
*இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல.*

# சென்னை மழை வெள்ளம் - புவியியல் குறிப்பு

V கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

**சென்**னை மழை வெள்ளம் ஏற்படுத்திய பாதிப்புகள், மக்கள் அனுபவித்த துயரங்கள் பரவலாக பதிவு செய்யப்பட்டு வருகின்றது. இந்த துயர சம்பவங்கள் தோற்றுவித்திருக்கும் மனிதாபிமானத்தோடு நிற்காமல், நடந்து முடிந்த பேரழிவை அதன் உண்மையான பின்னணியோடு அரசியல் ரீதியிலும் விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இருவிதமான கண்ணோட்டங்களை வளர்க்கும் வேலையினை ஊடகங்கள் மற்றும் ஜெயாவின் அடிமைப் பட்டாளங்களான செய்து வருகின்றன. "இயற்கையை எதிர்த்து மனிதன் என்ன செய்ய முடியும்?", "மனிதன் பேராசையால் ஏரி குளங்களை ஆக்கிரமித்துக் கொண்டதன் பலனை அனுபிக்கிறான்" என்பதான சமாளிப்புகள் இயற்கையையும் மக்களையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகின்றன.

**இது உண்மையா?**

ஆனால், சென்னையைப் புரட்டிப் போட்ட வெள்ளத்திற்கு இந்த மழை தான் காரணமா? இல்லை. மழை வெள்ளத்தால் நிரம்பிய நீராதாரங்கள் கையாளப்பட்ட விதமும், வெள்ள வடிகால்களில் கைவிடப்பட்ட பராமரிப்புப் பணிகளும் தான் இந்தப் பேரிடருக்கான மிக முக்கியமான காரணிகள். முதலில் சென்னையைச் சுற்றிலும் உள்ள நீராதாரங்கள் மற்றும் அதன் புவியியல் அமைப்பைப் பற்றி சுருக்கமாக பார்ப்போம்.

சென்னை மாநகருக்கான மிக முக்கியமான நீர் ஆதாரங்கள் நான்கு - அவை, செம்பரம்பாக்கம் ஏரி, பூண்டி ஏரி, சோழாவரம் ஏரி மற்றும் செங்குன்றம் ஏரி. இந்த நான்கு ஏரிகளில் இருந்து சென்னை நகருக்குள் கொசஸ்தலை ஆறு, அடையாறு மற்றும் கூவம் ஆகிய மூன்று நதிகள் பாய்கின்றன. இந்த மூன்று நதிகளையும் சென்னை கடற்கரை ஓரம் ஓடும் பக்கிங்ஹம் கால்வாய் இணைக்கின்றது.

சுமார் 210 ஆண்டுகளுக்கு முன்பு (1806-ம் ஆண்டு) வெள்ளையர்களால் வட சென்னையையும் எண்ணூரையும் இணைப்பதற்காக வெட்டப்பட்ட பங்கிங்கம் கால்வாய், பின்னர் படிப்படியாக விரிவாக்கப்பட்டு தற்போது ஆந்திராவின் காக்கிநாடாவில் இருந்து சுமார் 792 கிலோ மீட்டர்கள் வங்க கடற்கரையோரம் பயணித்து, சென்னையின் ஊடே அதன் கரையோரம் ஓடிக் கடந்து, விழுப்புரத்திற்கு அருகே முடிவடைகிறது. இந்தக் கால்வாயின் மிக முக்கியமான இணைப்பான கூவம் - அடையாறு நதிநீர் இணைப்பு 1876-77 காலகட்டத்தில் சென்னை மாகாணத்தைத் தாக்கி சுமார் 60 லட்சம் மக்களை பலிவாங்கிய தாது வருஷ பஞ்சத்தை அடுத்து ஏற்படுத்தப்பட்டதாகும்.

தீபகற்க இந்தியாவின் தக்காண பீடபூமியின் மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்குத் தொடர்ச்சி மலையும் ஆங்கில 'ஒய்' வடிவில் எழுந்து நிற்கிறது. தக்காண பீடபூமியில் இருந்து உற்பத்தியாகும் நதிகள் கிழக்கே வங்கக் கடலில் கலக்கின்றன. வட தமிழகத்தைப் பொறுத்த வரையில் சென்னை, கடலூர், விழுப்புரம், பாண்டிச்சேரி ஆகியவை வடிகால் பகுதிகள். வட தமிழகத்தைச் சேர்ந்த பெரும்பாலான நதிகள் பருவ மழையை ஆதாரமாகக் கொண்டவை.

பருவமழைக் காலங்களில் நதிகளில் பாயும் வெள்ளம் கடலில் கலந்து பயனற்றுப் போவதைத் தடுக்க சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம் உள்ளிட்ட வட தமிழகத்தில் நிறைய ஏரிகளும் குளங்களும் இவற்றை இணைக்கும் கால்வாய்களையும் ஏற்படுத்தி வைத்திருந்தனர் நமது முன்னோர்கள். வெள்ளையர் ஆட்சியில் பக்கிங்ஹம் கால்வாய் உள்ளிட்ட ஒரு சில நீர் மேலாண்மை திட்டங்களைத் தவிர்த்து பெரியளவிலான பணிகள்

நடைபெறவில்லை. எனினும் இருப்பதைப் பராமரித்து வந்தனர். நதி நீர் கடலில் பாய்வதற்கு முன் ஒரு ஷாக் அப்சர்வர் போல செயல்பட்டு நீரை பிற பகுதிகளுக்கு பகிர்ந்தளித்த பக்கிங்ஹாம் கால்வாய் மிக முக்கியமான பங்கை ஆற்றுகின்றது.

சென்னைக்கு மேற்கே வேலூர் செல்லும் வழியில் 90 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள காவேரிபாக்கம் என்ற ஊரில் இருந்து உற்பத்தியாகிறது கொசஸ்தலை ஆறு. இந்த ஆறு மொத்தம் 136 கிலோமீட்டர்கள் தூரம் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் சென்னை ஆகிய ஊர்களைக் கடந்து வங்கக் கடலில் கலக்கிறது. இந்த கொசஸ்தலை ஆறு இரண்டாகப் பிரிவதால் உருவாகும் நதி தான் கூவம். கொசஸ்தலை ஆறும், ஆந்திர மாநிலம் நகரியில் இருந்து உருவாகி வட தமிழகத்தை அடையும் நகரி ஆறும் பூண்டி ஏரியை அடைகின்றன. தெலுகு கங்கை திட்டப்படி தமிழகத்திற்கு சேர வேண்டிய நீரும் ஆந்திராவிலிருந்து கால்வாய் மூலம் பூண்டி ஏரியை அடைகிறது.

பூண்டி ஏரியில் இருந்து தாமரைப்பாக்கம் தடுப்பணைக்கு வரும் நீர் அங்கிருந்து சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளை அடைகின்றது. செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து துவங்கும் அடையாறு, முடிச்சூர், மேற்கு தாம்பரம், பம்மல் வழியாக சென்னை விமான நிலையத்தைக் கடந்து (புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரண்டாம் ஓடுபாதை, மிகச்சரியாக அடையாறின் மேல் அமைந்துள்ளது) நந்தம்பாக்கம், ஈக்காட்டுத்தாங்கல், சைதாப்பேட்டை, வழியே கடலை அடைகிறது.

இன்னொருபக்கம், இரண்டாக பிரிந்த கொசஸ்தலை ஆறு, கூவம் நதியாக வட சென்னை வழியே கடலை அடைகிறது. கொசஸ்தலை ஆறாகவே ஓடும் இன்னொரு பிரிவு, எண்ணூர் அருகே கடலில் கலக்கிறது. இம்மூன்று நதிகளும் கடலில் கலப்பதற்கு முன் பக்கிங்ஹாம் கால்வாயைக் கடந்தாக வேண்டும். மேலும் மிக முக்கியமான பல பாலங்களையும் கடந்தாக வேண்டும்.

சென்னை நகரைப் பொறுத்தவரை, ஒவ்வொரு ஆண்டும் பருவ மழைக்காலத்திற்கு முன் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் இந்த கால்வாய்கள் மற்றும் வடிகால்களை தூர்வாறும் பணி நடைபெற்றாக வேண்டும். பராமரிப்புப் பணியை போன ஆட்சி செய்ததா இல்லையா என்பதல்ல கேள்வி - ஒவ்வொரு நாளும் மலம் கழித்து குடலை சுத்தம் செய்வதைப் போல் இந்தப் பணி ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் நடந்தாக வேண்டும். நீர் நிலைகளில் கடந்த சுமார் 25 ஆண்டுகளில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகள் குறித்து பின்னர் பார்ப்போம். உடனடி புரிதலுக்காக, ப்ரண்ட்லைன் பத்திரிகை செய்தியில் பொதுப்பணித் துறை முன்னாள் பொறியாளர் ஒருவர் தெரிவித்த தகவலின் படி இந்தாண்டு சென்னை மாநகராட்சியின் சார்பாக கால்வாய் தூர்வாறுவது சீரமைப்பது போன்ற வேலைகளைச் செய்யாமலேயே போலியான பில்களை சமர்பித்து மேற்படி பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையைக் கொள்ளையடித்துள்ளனர்.

ஆக, சென்னை மாநகரை ஒரு பேரழிவிற்குள் தள்ளுவதற்கான முன் தயாரிப்புகளை ஆளும் கட்சியினர் ஏற்கனவே செய்து வைத்திருந்த நிலையில் தான் வரலாறு காணாத பருவமழை துவங்கியது.

இதே காலகட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்பிடிப்புப் பகுதியில் மட்டுமின்றி மற்ற அடையாறு நதியின் கலக்கும் மேலும் 200 ஏரிகளின் நீர்பிடிப்புப் பகுதிகளிலும் கன மழை பொழிந்துள்ளது என்பதையும் சேர்த்துத் தான் சென்னை நகரமே வெள்ளக்காடானது.

“யார் இதற்குக் காரணம்?” என்பது யருக்கும் தெரியாததல்ல..

# இறைவனின் கணக்கு...

ஒரு கோவில் மண்டபத்தின் வாசலில் இரண்டு வழிப் போக்கர்கள் அமர்ந்திருந்தனர். இரவு நேரம்... பெருத்த மழையும் பெய்து கொண்டிருந்தது...அப்போது அங்கே மற்றொருவரும் வந்து சேர்ந்தார். வந்தவர் நானும் இரவு இங்கே தங்கலாமா? என்று கேட்டார். அதற்கென்ன... தாராளமாய் தங்குங்கள் என்றார்கள். சிறிது நேரம் கழித்து எனக்கு சாப்பிட ஏதாவது கிடைக்குமா? என்றார் வந்தவர்.

இருவரில் முன்னவர் சொன்னார், என்னிடம் ஐந்து ரொட்டிகள் இருக்கின்றது என்றார். இரண்டாமவர் என்னிடம் மூன்று ரொட்டிகள் இருக்கின்றது, ஆக மொத்தம் எட்டு ரொட்டிகள். இதனை நாம் எப்படி மூவரும் சமமாய் பிரித்துக்கொள்ள முடியும்? என்றார். மூன்றாம் நபர், இதற்கு நான் ஒரு வழி சொல்கிறேன் என்றார். நீங்கள் உங்கள் ரொட்டிகளை, ஒவ்வொரு ரொட்டியையும் மூன்று துண்டுகள் போடுங்கள். இப்போது இருபத்து நான்கு துண்டுகள் கிடைக்கும்! நாம் மூவரும் ஆளுக்கு எட்டு துண்டுகள் எடுத்து கொள்ளலாம் என்றார்.

இது சரியான யோசனை என்று அப்படியே செய்தனர்... ஆளுக்கு எட்டு துண்டு ரொட்டிகளை சாப்பிட்டுவிட்டு உறங்கினார்கள்... பொழுது விடிந்தது, மழையும் நின்றது. மூன்றாவதாய் வந்தவர் கிளம்பும்போது, உங்கள் உதவிக்கு மிக்க நன்றி, என்று சொல்லி எட்டு வெள்ளி நாணயங்களை கொடுத்து, நீங்கள் உங்களுக்குள் பிரித்து கொள்ளுங்கள், என்று சொல்லிவிட்டு விடை பெற்றார்.

மூன்று ரொட்டிகளை கொடுத்தவர், அந்த காசுகளை சமமாக பிரித்து, ஆளுக்கு நான்காய் எடுத்துக் கொள்ளலாம் என்றார். மற்றவர் இதற்கு சம்மதிக்கவில்லை. மூன்று ரொட்டிகள் கொடுத்த உனக்கு மூன்று காசுகள என்றும். ஐந்து ரொட்டிகள் கொடுத்த எனக்கு ஐந்து காசுகள் என்றும் வாதிட்டார். மூன்று ரொட்டிகள் கொடுத்தவர் ஒப்புக் கொள்ளவில்லை...

என்னிடம் மூன்றே ரொட்டிகள் இருந்தபோதும், நான் பங்கிட சம்மதித்தேன்... நிறைய இருப்பவன் கொடுப்பது ஒன்றும் பெரிய செயல் ஆகாது. அதனால் என் செய்கையே பாராட்டத்தக்கது என்றாலும் பரவாயில்லை, சமமாகவே பங்கிடுவோம் என்றார். சுமூகமான முடிவு எட்டாததால், விஷயம் அரச சபைக்கு சென்றது.

அரசனுக்கு யார் சொல்வது சரி, என்று புரியவில்லை. நாளை தீர்ப்பு சொல்வதாய் அறிவித்து, அரண்மனைக்கு சென்றான். மன்னருக்கு இரவு முழுவதும் இதே சிந்தனை. வெகு நேரம் கழித்தே தூங்க முடிந்தது.... மன்னருக்கு கனவில் கடவுள் காட்சி அளித்து தீர்ப்பும், விளக்கமும் தந்தார். கடவுள் சொன்ன தீர்ப்பும், விளக்கமும் மன்னரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அடுத்த நாள் சபை கூடியது. மன்னர் இருவரையும் அழைத்தார். மூன்று ரொட்டிகளை கொடுத்தவருக்கு ஒரு காசும், ஐந்து ரொட்டிகளை கொடுத்தவருக்கு ஏழு காசுகளும் கொடுத்தார். ஒரு காசு வழங்கப்பட்டவர், 'மன்னா...! இது அநியாயம். அவரே எனக்கு மூன்று காசுகள் கொடுக்க ஒப்புக் கொண்டார்" என்றார். அரசர் சொன்னார். நீ கொடுத்தது ஒன்பது துண்டுகள். அதிலும் எட்டு துண்டுகள் உன்னிடமே வந்து விட்டது. அவன் தந்தது பதினைந்து துண்டுகள். அவனுக்கும் எட்டுத்துண்டுகள்தான் கிடைத்தது.

ஆக... நீ தர்மம் செய்தது ஒரு துண்டு ரொட்டி. இதற்கு இதுவே அதிகம். அவர் தர்மம் செய்தது ஏழு துண்டுகள். ஒரு துண்டுக்கு ஒரு காசு வீதம் பிரித்துக்

கொடுத்திருக்கிறேன் என்றார்... ஆம்! கடவுளின் கணக்கு இப்படி துல்லியமாகத்தான் இருக்கும்.

நீங்கள் இழந்ததை எல்லாம் தருவது அல்ல, அவன் கணக்கு... எது உங்களுக்கு தகுதியானதோ அதுதான் உங்களுக்கு.

**இது கடவுளின் கணக்கு... இது ஏட்டு கணக்கு இல்லை... தர்ம புண்ணிய கணக்கு...! நாம் செய்யும் செயலில் இறைவன் இருக்கிறார் என்பதை மறவாதீர்கள்.**

---

## மழைநீர் வடிகாலுக்காக எத்தனை கோடிகள்? என்ன தான் நடந்தன?

2015 தின் சோக காட்சிகள் இந்த ஆண்டும் அரங்கேறுவதற்கான சாத்தியகூறுகள் இருந்த போதிலும், கொஞ்சம் தப்பித்தோம் என்று தான் சொல்ல வேண்டும்! பல ஆயிரம் கோடிகள் மழை நீர் வடிகால் பணிகளுக்கு செலவழிக்கப்பட்டுள்ளன. அவை போதுமான பலன்களை தராமல் வீடுகளுக்குள் வெள்ளம் போனதன் காரணம் என்ன..?

இன்றைய ஆட்சியாளர்கள் பேரழிவுகளை தவிர்க்க ஆனமட்டும் முயற்சிக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. முதல்வரும், அதிகாரிகளும் களத்தில் இறங்கி வேலை செய்கின்றனர். இப்போதே நிலைமை இப்படி உள்ளது. இதை வருங் காலத்தில் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்ற பரிதவிப்பில் தான் அனைவரும் உள்ளோம்.

முன்கூட்டியே தமிழக முதல்வர் ஸ்டாலின் வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் வெள்ளநீர் வெளியேற, மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருந்தார். அதனடிப்படையில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு கூட்டங்கள் நடத்தி நகர்ப்புற உள்ளாட்சித் துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில், 20.9.21 முதல் 25.9.21 வரை 'மாபெரும் மழைநீர் வடிகால் தூய்மைப் பணி முகாம்' ஆக அறிவித்து, அனைத்து மழைநீர் வடிகால்களையும் 100 சதவீதம் தூர்வாரி தூய்மைப்படுத்த சிறப்பு இயக்கமாக முன்னெடுத்து செயல்படுத்த ஆலோசனை வழங்கி இருந்தார்!

தற்போதைய கனமழையால் சென்னை உள்ளிட்ட வட தமிழக மாவட்டங்கள், மற்றும் திருச்சி, நாமக்கல் வரை உள்ள மாவட்டங்களும் கடும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளன! தென் தமிழகமும், மேற்கு தமிழகமும் பெரிய பாதிப்புகள் இல்லை.தரமற்ற கட்டுமானத்தால் கடலூர் அருகே உள்ள ஒரு தடுப்பணை விரிசல் விட்டுள்ளது காவேரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் வட மாவட்டங்களில் பயிர்கள் பல ஆயிரம் ஏக்கர் நீரில் மூழ்கியுள்ளன. ஆற்று மணலை நாள்தோறும் அள்ளிச் செல்வதால் தான் மழைக்காலங்களில் மழைவெள்ளம் பயிர்களை பாதிக்கிறது.

சென்னை நகரத்தை பொறுத்த வரை இது ஒரு சமதளமான பகுதி. ஐதராபாத், டெல்லி, பெங்களூரு நகரங்கள் போல் சென்னை நகரத்தின் அமைப்பு கிடையாது. சென்னை நகர் பகுதியில் மழை நீர் சென்று சேர கழிவு நீர் குழாய், மழைநீர் வடிகால்கள் என 2 விதமான வடிகால் அமைப்புகள் உள்ளன. சென்னை நகரில் 5,550 கிலோ மீட்டருக்கு சாலைகள் அமைந்துள்ளன. இந்த சாலைகளின் ஓரங்களில் 7,200 கிலோ மீட்டரில் கழிவு நீர் வடிகால் பாதைகள் உள்ளன. சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் தான் மழைநீர்

வடிகால்கள் உள்ளது. இது 2,350 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இவையாவும் பழமையானவை! பழுதடையக் கூடிய மற்றும் தற்போதைய வளர்ச்சி போக்குகளை தாங்கமுடியாத நிலையிலும் உள்ளன.

100 வருடத்திற்கும் மேற்பட்ட வடிகால் கட்டிடங்களும் இங்கு உள்ளது. படித்த மனிதர்கள் நிறைந்த சென்னை உள்ளிட்ட நகரங்களில் தற்போது, மழைநீர் வடிகால்களை மக்கள் குப்பை தொட்டியாகவே பயன்படுத்துகிறார்கள்.

ஒரு பகுதியில் எந்த அளவுக்கான கழிவு நீர் குழாய்கள் உள்ளனவோ..அதற்கு மேல் அங்கு எந்த ஒரு புது குடியிருப்பையும் அனுமதிக்கக் கூடாது. அடுக்குமாடி குடியிருப்புகளை அதிகப்படுத்த ஒரு போதும் அனுமதிக்க கூடாது. இந்த கட்டிடங்களுக்கு அனுமதி தரும் சி.எம்.டி.ஏ சரியாக இருந்தாலே சென்னை சிறப்பாக இருக்கும். சென்ற ஆட்சி காலத்தில் அது மிகவும் சீர்கெட்டு இருந்தது. அதன் நிர்வாக இயக்குனராக இருந்த கார்த்திகேயன் சதா சர்வகாலமும் காசு, பணம், துட்டு, மணி, மணி என்று ஆளாய் பறந்தவர். இப்படிப்பட்ட அதிகாரி தான் அந்தத் துறையின் அமைச்சராக விளங்கி ஓ.பி.எஸ்சுக்கு தேவைப்பட்டது.

**ஓ.பி.பன்னீர் செல்வம், கார்த்திகேயன் ஐ.ஏஎஸ்**

சென்ற ஆட்சியில் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த வேலுமணியும், சென்னை மாநகராட்சி கமிஷனராக இருந்த பிரகாஷும் சேர்ந்து மழைநீர் வடிகால் திட்டங்களை எல்லாம் பணம் ஒன்றே குறிக்கோளாய் இயங்கி பாழ்படுத்திவிட்டனர். சென்ற ஆட்சியில் மழை நீர் வடிகால் திட்டப்பணிகள் தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தகவல்களை அறப்போர் இயக்கம் கேட்ட போது அதிகாரிகள் பதில் தரமறுத்துவிட்டனர்.

**பிரகாஷ் ஐ.ஏ.எஸ் , வேலுமணி**

சென்ற ஆட்சியில் கொசஸ்தலை ஆறு வடிகால் திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி 2,800 கோடி தந்தது. இது ஒழுங்காக செயல்படுத்தப்பட்டு இருந்தால் வடசென்னை வெள்ளத்தில் தத்தளித்து இருக்காது. அது போல கோவளம் வடி நிலப் பகுதியில் வடிகால் வசதி செய்ய ஜெர்மன்வளர்ச்சி வங்கி 3,500 கோடி ஒதுக்கியது. இது ஒழுங்காக செயல்படுத்த பட்டிருந்தால் தென் சென்னை வெள்ளைத்தில் தத்தளித்து இருக்காது. இது போக உலகவங்கி மழை நீர் வடிகால் திட்டத்திற்கு 101 கோடியே 43 லட்சம் தந்தது! இவ்வளவு நிதிகள் ஒதுக்கப்பட்டும் ஏன் தெருக்களில் வெள்ளம் தேங்குகிறது. வீடுகளுக்குள் தண்ணீர் வருகிறது. சென்னை திணறுகிறது? என்பதற்கு விடை தருகிறார் முன்னாள் பொதுப் பணித்துறை தலைமை பொறியாளர் **அ.வீரப்பன்**.

"மழை நீர் வடிகால் குழாய்கள் பதிக்கப்படுவதன் நோக்கம் என்ன என்பதை புரிந்து கொள்ளாமலே திட்டத்தை செயல்படுத்தி உள்ளனர். மழை நீர் வடிகால் குழாய்களின் அமைப்பே சரியில்லை. மேலும் அவைகளுக்குள் விழுந்த நீரை அருகேயுள்ள ஆறு, குளம்,ஏரி போன்ற ஏதாவது ஒரு நீர் விலையில் விழுவது போல செய்தால் தான் நோக்கம் நிறைவேறும். ஏதோ ஒரு முட்டுச் சந்தோடு அந்தக் குழாய் தொடர்பற்று விடப்பட்டதால் தான் இந்த நிலைமை" என்கிறார்.

அதாவது, அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் பணம் வேண்டும். காண்டிராக்டர்களுக்கு வேலை வேண்டும். திட்டம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா? என்பதில் யாருக்குமே அக்கறை இல்லை. அதுவும் அமைச்சர் வேலுமணி தன் சகோதர்கள், உறவினர்கள் என்பதாக பல பினாமி நிறுவனங்களுக்கு எல்லா காண்டிராக்டும்

கிடைக்கும்படி செய்வது ஒன்றில் தான் அக்கறை காட்டினார். ஆகவே, பல ஆயிரம் கோடிகள் கொட்டப்பட்டும் திட்டத்தின் நோக்கம் என்னவோ அது நிறைவேறாமல் போகிறது!

சென்னையை பொறுத்த வரை பள்ளிக்கரணை, நந்தனம், நுங்கம்பாக்கம், கொடுங்கையூர், ஆதம்பாக்கம் உள்ளிட்ட 30 கால்வாய்கள் மற்றும் அடையாறு, கூவம், கொசஸ்தலையாறு, பக்கிங்காம் கால்வாய் என நான்கு விதமான முக்கிய நீர் ஓடும் தளத்தில் தான் மழை நீர் சென்று சேர வேண்டும். ஆனால், இவற்றுக்கு சென்று சேர்வதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படும் வண்ணம் அடைப்புகளும் ஆக்கிரமிப்புகளும் உள்ளன.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி மிகவும் துடிப்பாக செயல்படுகிறார்! இவராவது தன் பணிகாலத்திற்குள் இந்தச் நிலைமைகளை சீர்செய்வாரா..? கே.என்.நேரு எந்த அளவுக்கு ஆர்வம் காட்டுவார்..? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**சாவித்திரி கண்ணன்**
**அறம் இணைய இதழ்** **(Nov21)**

---

## நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

### <u>எந்தச் சலுகையும் வேண்டாம்</u>

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மாபெரும் தலைவராக விளங்கியவர் ப. ஜீவானந்தம்

ஒரு சமயம் தலைவர் ஜீவானந்தம் வீட்டுக்கு அன்றைய தமிழக முதல்வர் காமராஜ் திடீரென்று விஜயம் சென்றார் அந்த வீடு மிகச்சிறிய குடிசை வீடாக இருந்தது. அந்த வீட்டையும் அவர் வாழ்ந்த எளிய நிலையையும் கண்ட காமராஜர் மிகவும் வேதனைப்பட்டார்.

அவர் ஜீவானந்தத்திடம் “இந்த சிறிய குடிசையில் எப்படி வசிக்கிறீர்கள்? விரைவில் வேறு ஒரு நல்ல வீட்டிக்கு ஏற்பாடு செய்கிறேன்/” என்றார் காமராஜர்.

அதற்கு ஜீவானந்தம் “பெருந்தகையீர்! இந்த குடிசை கூட இல்லாமல் பல லட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது நான் மட்டும் வசதியான வீட்டைத் தேடிக்கொள்வது எந்த விதத்தில் நியாயம்? எனக்கு இந்த வீட்டில் தான் நிம்மதியான வாழ்க்கை இருக்கிறது” என்றார்.

எளிமைக்குப் பெயர் போன காமராஜரே, ஜீவானந்தத்தின் எளிமையைப் பார்த்து வியந்தார்.

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு N சுப்ரமணியன், தலைவர் : 9444274352
திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : 87783 12823
திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் : 90031 25142

**E- Mail: acmchennai2001@yahoo.co.in**

**Website : anticorruptionchennai.com**

# பெறுநிறுவனங்களின் வாராக்கடன் சொத்து மதிப்பு விவசாயக்கடன் தள்ளுபடியை போல் இரு மடங்கு அதிகம்

**By Rohit Prasad,Gaurav Gupta (India Spend)**

**புதுடெல்லி:** விவசாய கடன்களை மாநில அரசுகள் தள்ளுபடி செய்வது பற்றிய சூடான விவாதங்களில் செய்தி ஊடகங்கள் ஈடுபடுவதும்; அது பொதுமக்களின் கவனத்தில் பெரிய அளவில் கவனத்தை பெறும் சூழலில், அரசு வங்கிகளின் நிதியை கடனாக பெற்று அதை திரும்பச் செலுத்தாத பெறு நிறுவனங்களின் (கார்ப்பரேட்) தவறுகள் தொடர்ந்து கவனிக்கப்படாமல் உள்ளது.

இது உத்தரவாதமற்றது என புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. கார்ப்பரேட் நிறுவனங்களில் வாராக்கடங்களின் சொத்து (NPA) அளவுகளின் சிக்கல் அதிகளவில் உள்ளது; கார்ப்பரேட் நிறுவனங்களில் இயல்புநிலை பொது கருவூல மதிப்பு, தள்ளுபடி கோரும் விவசாயக்கடனை விட அதிகம். வங்கிகளின் இத்தகைய மறுமுதலீடு வரவேற்கத்தக்கது எனில், விவசாயிகளின் கடன் தள்ளுபடியும் ஏற்கத்தக்கதாகவே இருக்க வேண்டும்.

2017-18ஆம் நிதியாண்டு முதல் இன்று வரை, 10 மாநில அரசுகள் விவசாயக் கடன் தள்ளுபடியை அறிவித்தன; அதன் மொத்த மதிப்பு ரூ.184,800 கோடி. மாறாக, 2015 மார்ச் மாதம் வரை இந்தியாவின் முதல் 10 பெருநிறுவனங்கள் பெற்ற மொத்த கடன்களின் மதிப்பான ரூ .7,31,000 கோடி என்பது கிட்டத்தட்ட நான்கு மடங்காகும்; மற்றும் முதல் 12 கார்ப்பரேட் நிறுவன வாராக்கடங்களின் சொத்துகள் கிட்டதட்ட இரு மடங்காக ரூ.3,45,000 கோடி ஆகும். விவசாயத்தில் நலிவுற்ற கடன்களின் சதவீதம், தொழில்துறையைவிட மிகக்குறைவு என்று தரவு காட்டுகிறது.

### கருவூலத்திற்கு அதிக செலவினம்

வங்கிகளின் மொத்த கடன் (வங்கியிடம் இருந்தோ அல்லது தனிநபர்களிடம் இருந்தோ வழங்கப்படும் கடன்கள்) மார்ச் 2017ஆண்டின்படி ரூ .71.5 லட்சம் கோடி; மார்ச் 2018 ஆம் ஆண்டின்படி, ரூ. 77 லட்சம் கோடி என்று, 2018 டிசம்பரில் வெளியான இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அறிக்கை கூறுகிறது. இதில், ஒவ்வொரு ஆண்டிற்கும் விவசாய கடன் ரூ. 10 லட்சம் கோடியாக இருந்தது; ஒட்டுமொத்த வங்கிக்கடனில் இது சராசரியாக 13-14% பங்கைக் கொண்டது. ஒவ்வொரு பருவத்திலும் தொழில்துறையின் மொத்த கடன் ரூ. 26-27 லட்சம் கோடியாக இருந்தது; இது, ஒட்டுமொத்த வங்கிக் கடனில் 35% பங்கை கொண்டிருந்தது. இதில், பெரிய அளவில் கடன் பெற்றவர்கள் -- ரூ.5 கோடிக்கு மேல் கடன் பெற்றவர்களை ரிசர்வ் வங்கி இவ்வாறு வரையறுக்கிறது -- கடன் மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் ரூ.22 லட்சம் கோடியாக இருந்தது.


மேலும் குறிப்பாக, மார்ச் 2015 வரை, முதல் 10 பெறுநிறுவன கடனாளர்களுக்கான மொத்த கடன் ரூ.7 லட்சம் கோடி; இது மொத்த வங்கி கடன் 10-14%; மற்றும் மொத்த தொழில் கடன் 27% ஆகும் என கிரெடிட் சூசி சர்வதேச நிதி சேவை நிறுவனமான ஆராய்ச்சி அறிக்கை தெரிவிக்கிறது. அதே காலகட்டத்தில், விவசாய மற்றும் கூட்டு நடவடிக்கைகளுக்கான மொத்த கடன் ரூ.7.7 லட்சம் கோடி -- முழு விவசாயத்துறையும் வங்கி அமைப்புக்கு, முதல் 10 இந்திய பெறு நிறுவனங்கள் வாங்கிய கடன் அதே அளவுக்கு இருந்தது.

இந்திய வங்கியில் மொத்த செயல்பாடற்றா சொத்துக்கள் ரூ. 8 லட்சம் கோடியாக, 2017 மார்ச்சிலும்; ரூ 10.3 லட்சம் கோடியாக 2018 மார்ச் மாதத்திலும் இருந்தாக, இந்திய ரிசர்வ் வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

வாராக்கடங்களின் சொத்துக்கள் மீது பெரிய கடன் வாங்குபவர்களின் பங்கு, 40% மொத்த கடன்களின் பங்களிப்புடன் (வங்கிகள் வழங்கும்) காலப்போக்கில் அதிகரித்து வருகிறது;

இது, 2017 மார்ச் இறுதியில் மொத்தமாக ஸ்டிரெஸ்டு சொத்துகளில் (வாராக்கடங்களின் சொத்து உட்பட வங்கிகளால் எழுதப்பட்ட கடன்கள் மற்றும் சொத்துக்களை மறுகட்டமைத்தல் உட்பட) ஒரு பங்கு ஆகும்.

**மொத்த கடன் மற்றும் இந்திய வங்கிகளில் 'ஸ்டிரெஸ்ட் சொத்துகளில் பெறப்பட்ட பெரிய கடன் விகிதம்**




Source: Reserve Bank of India, April 2018

வங்கித்துறையின் மொத்த வாராக்கடன்களில், மொத்தம் முதல் 12 நிறுவனங்கள் தோராயமாக 25% அடையாளம் காணப்பட்டது; மற்றும் 2017 ல் ரிசர்வ் வங்கியால் தேசிய கம்பனியின் சட்டம் தீர்ப்பாயம் (தீர்மானம் மற்றும் மீட்புக்காக) குறிப்பிடப்படுகிறது; மற்றும் 2017 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியால் தேசிய கம்பெனிகள் சட்ட தீர்ப்பாயத்திற்கு (தீர்வு மற்றும் மீட்புக்காக) பரிந்துரை செய்யப்பட்டது. இவற்றில் நான்கு, ஓராண்டுக்குள் தீர்வு காணப்பட்டு அவர்களின் நிலுவை கடனில் 52% வசூலிக்கப்பட்டது. மீட்கப்பட்ட இந்த தொகையானது, முதல் 12 பெறு நிறுவனங்களின் வாராக்கடன் சொத்து மதிப்பான ரூ.3,45,000 கோடியில் 14% அல்லது ரூ.48,300 கோடி மட்டுமே ஆகும். எனவே, எஞ்சியுள்ள எட்டு நிறுவனங்களிடம் வசூலிக்க வேண்டிய ரூ.3 லட்சம் கோடி, 10 மாநிலங்கள் விவசாயிகளுக்கு அறிவித்த கடன் தள்ளுபடியைவிட இது இரு மடங்கு அதிகமாகும்.

Source: Insolvency and Bankruptcy Board of India Quarterly Newsletter, Oct-Dec 2018

**Dues Recovered From 5 Large NPAs Between Oct 2017 And Sep 2018**

| Large Accounts | Dues | Realisation | % Realisation | Difference Between Actual Dues And Amount Repaid In Settlement With Banks | Resolved In |
|---|---|---|---|---|---|
| Zion Steel | 5367.00 | 15.00 | 0% | 100% | Jul-Sep18 |
| Adhunik Metals | 5371.00 | 410.00 | 8% | 92% | Jul-Sep18 |
| MBL Infra | 1428.00 | 1597.00 | 112% | NA | Apr-Jun18 |
| Kohinoor CTNL Infra | 2528.00 | 2246.00 | 89% | 11% | Jan-Mar18 |
| Sree Metalik | 1287.00 | 607.00 | 47% | 53% | Oct-Dec17 |
| Total | 15981.00 | 4875.00 | 31% | 69% | |

Source: Compiled from Insolvency and Bankruptcy Board of India Quarterly Newsletters

மேலும் பெரியளவில் ஆராய்ச்சியை மேற்கொண்டால், மற்ற பெரிய வெளிப்பாடுகள் (அல்லது ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மொத்த கடன்கள், ரூபாய் 1,000 கோடிக்கு மேலானது என வரையறுக்கப்படும்) கடன்களின் மீட்பு 30% அளவிற்கு இருந்தது.

ஐந்து கார்ப்பரேட் நிறுவன வாராக்கடன் சொத்துகளுக்காக வங்கிகளால் எழுதப்பட்ட தொகை ரூ.11,106 கோடி -- இது சத்தீஸ்கர் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களின் மொத்த விவசாய கடன் தள்ளுபடி தொகையைவிட அதிகம்.

**விவசாயத்துறையில் கார்பரேட் நிறுவன நடவடிக்கை மற்றும் பெரிய கடன் பெறுவோருக்கு விவசாய கடன்கள்**

பண்ணை கடன் பற்றிய பெருவாரியான கருத்து ஏழை மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவுகிறது என்றாலும், விவசாயக்கடன் பெறும் சிறிய விவசாயிகள் குறைந்தபட்சம் பயனடையலாம்; ஏனெனில், பணம் ஈட்டும் முறைசாராத ஆதார நிதி நிறுவனங்களிடம் இருந்து, அவர்கள் பெரும்பாலும் கடன் வாங்குகின்றனர். எனவே, அரசு அறிவிக்கும் கடன் தள்ளுபடி அறிவிப்பால், இத்தகைய பொருந்தாத நிதி அமைப்புகளிடம் கடன் பெற்றவர்கள் எந்த வகையிலும் பயனடைய முடியாது.

இந்தியாவில் விவசாய கடன் முக்கிய சீட்டாகவும் (பெரிய கடன் தொகைகளில்) மற்றும் விவசாயத்துறையில் கார்ப்பரேட் செயல்பாட்டிற்கும் செல்வதாக, தரவுகள் காட்டுகின்றன. உயர்ந்த மதிப்புக் கடன்கள் விகிதம் (ரூ.10 லட்சத்திற்கும் மேல்) பங்களிப்பு என்பது, 1990 ஆம் ஆண்டில் 4.1% இல் இருந்து 2011ஆம் ஆண்டில் 23.8% ஆக அதிகரித்தது; இது நேரடியாக விவசாய மற்றும் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மக்கள் / நிறுவனங்களுக்கு செல்கிறது -- (உதாரணமாக, கூட்டுறவு அமைப்புகள் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கும் மின்சார வாரியங்களுக்கு கூடுதல் கடன் வழங்க நிதி அளித்தல்). அதே கால கட்டத்தில் சிறிய கடன்களின் பங்கு (ரூ. 2 லட்சம்) 92.2% இல் இருந்து 48% ஆக குறைந்துள்ளது.

Table 8 *Distribution of amount outstanding under direct agricultural advances by scheduled commercial banks, by broad size-class of credit limit, 1985 to 2011* in per cent

| Year | Share of amount of direct advances with credit limit | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | < Rs 200,000 | > Rs 200,000 | Total | < Rs 1 million (Rs 10 lakh) | > Rs 1 million (Rs 10 lakh) | Total |
| 1985 | na | Na | 100.0 | 96.7 | 3.3 | 100.0 |
| 1990 | 92.2 | 7.7 | 100.0 | 95.8 | 4.1 | 100.0 |
| 1995 | 89.1 | 10.9 | 100.0 | 93.6 | 6.4 | 100.0 |
| 2000 | 78.5 | 21.4 | 100.0 | 91.3 | 8.6 | 100.0 |
| 2003 | 72.6 | 27.4 | 100.0 | 87.5 | 12.5 | 100.0 |
| 2005 | 66.7 | 33.4 | 100.0 | 88.1 | 12.0 | 100.0 |
| 2006 | 60.8 | 39.2 | 100.0 | 86.3 | 13.7 | 100.0 |
| 2011 | 48.0 | 52.0 | 100.0 | 76.2 | 23.8 | 100.0 |

Sources: Economic Survey, 2014-15 and Review of Agrarian Studies, Feb-Jun 2014)

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட தகவலின்படி 2016 ஆம் ஆண்டில் பொதுத்துறை வங்கிகள் (PSBs), 615 கணக்குகளுக்கு ரூ. 58,561 கோடியை, விவசாய கடனாக வழங்கியுள்ளதாக, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் *தி வயர்* இதழ் பெற்ற பதிலில் தெரிய வந்துள்ளது. ஒவ்வொரு கணக்கிலும் சராசரி விவசாயக்கடன் என ரூ. 95 கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது.

உண்மையில், பெருநிறுவனங்கள் கடன் வாங்குவது, இந்தியாவில் விவசாய கடன் வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கிறது; இதை கட்டாயமாக்கிய இந்திய ரிசர்வ் வங்கிக்கு நன்றி கூற வேண்டும்; அதாவது, வங்கிகளின் கடன் 40% (அல்லது 'நிகர வங்கி கடன்') என்பது, பொருளாதார முன்னுரிமை துறைகளுக்கு செல்ல வேண்டும்; இது, விவசாயத்திற்கான 18%

துணை வரம்பை கொண்டது. தொழில் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு வங்கிக் கடன்களில் வலுவான வளர்ச்சி விவசாய உற்பத்தியின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

பெருமளவிலான டிக்கெட் பிரிவில் முக்கியமாக விவசாய கடன் வளர்ச்சி என்பது மட்டுமின்றி, வேறு இரண்டு விஷயங்களும் உள்ளன: வங்கிகள் தங்களது முன்னுரிமை கடன் இலக்குகளை எதிர்கொள்ள, நிதியாண்டின் இறுதிக்குள் பெரும்பாலான விவசாய கடன் வழங்கப்படுகிறது; மற்றும் விவசாயிகளுக்கு உதவாத பருவ கடன்களும் உள்ளது; மற்றும் நகர்ப்புற இந்தியாவில் வங்கிக் கிளைகள் வழியாக விவசாய கடன் பெருமளவில் பெருமளவில் வழங்கப்படுகிறது என, ஆர். ராம்குமார் மற்றும் பல்லவி சவான் ஆகியோரால் வெளியிடப்பட்ட 2014 *விவசாய ஆய்வுகள் மதிப்பாய்வு* அறிக்கை தெரிவிக்கிறது.

விவசாயத்தில் பெரிய கடன்கள் அதிகரிப்பு மற்றும் அதிக சதவீத பங்களிப்பு, கூட்டுறவு 'விவசாயி' வங்கி துறையில் ஊக்கமளிக்கும் வழிவகைகளின் நன்மைகளை அனுபவித்து வருகிறார் என்பதை குறிப்பிடுகிறது. மறுபக்கம் சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளோ, முறைப்படுத்தப்படாத தனியார் நிறுவனங்களில் அதிக வட்டியை கொடுத்து கடன்களை சார்ந்திருப்பதாக கருதப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் சிறு/குறு விவசாயிகளுக்கு வழக்கத்திற்கு மாறான நிதி மீது மிகவும் குறைவான (14.9%) பங்குகளை பிரதிபலிக்கிறது; 0.01 ஹெக்டேர் நிலங்களைக் கொண்டுள்ள விவசாயிகளுக்கு நிறுவன கடன்களிய வழங்குகிறது.

### பெரிய வர்த்தகர்களைவிட விவசாயிகளின் சூழல் நிலையற்றது எதனால்?

திவாலா நடைமுறைகளின் முக்கிய அடித்தளம் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கூறுவதில் வெளிப்படையாக உறுதியளிக்காமல், மேம்பாட்டாளர்கள் சொத்துக்களை பாதுகாக்கிறது. எனவே, பெருநிறுவன திவால் என்பதும் வங்கி இருப்புத்தாள்களை சுத்தப்படுத்துவதும் ஒரே நேரத்தில் நடக்கிறது; மற்றும் இந்த தொழில்முனைவோர் உகந்த ஆபத்தை எடுத்துக் கொள்ளும் ஒருவழிமுறை. தங்களது சொத்துக்களை திவாலாக்கும் தொழில் முனைவோர் அதிலிருந்து மீண்டும் வரலாம்; ஆனால் -- பருவம் தவறும் வானிலை மற்றும் மோசமான விலையால் -- பயிர்களை இழக்கக்கூடிய ஒரு விவசாயியோ, ஒட்டுமொத்தமாக அனைத்தையும் இழக்கிறார்.

விவசாய கடன் தள்ளுபடி என்பது கட்டாயமான கடன்களை அகற்றும் அரசின் ஒரு பிரிவாகும்; வழக்கமாக தேர்தல் முடிந்த பிறகு, வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு கடன் தள்ளுபடி செய்யப்பட்டு, வங்கிகளுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். பொதுவாக கார்ப்பரேட் நிறுவன வாராக்கடன்கள், அரசு கடமைகளை ஏற்பதில்லை (வாராக்கடன் சொத்துகள் பொதுத்துறை வங்கிகளில் இருந்து அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடம் இருந்து இருக்கலாம்) வங்கிகளுக்கு நிதியை சீரமைப்பதன் மூலமாக வாராக்கடன்களின் சுமைகளை மறைமுகமாக அரசு ஏற்க வேண்டும் என்று நிலை உத்தரவாதமளிக்கும் - இது இப்போது இந்தியாவில் நடக்கிறது; 2008 நிதி நெருக்கடிக்கு பின் அமெரிக்காவில் நடந்தது.

கார்ப்பரேட் நிறுவனங்களின் வாராக்கடன் பிரச்சனை அதே துறைகளில் மீண்டும் திரும்பும்போது, கட்டமைப்பு மேம்பாடு இல்லாத நிலையில் வங்கிகள் அதே துறைகளுக்கு கடன் கொடுப்பதை வலியுறுத்துகின்றன.

### கட்டமைப்பு மாற்றங்களின் பற்றாக்குறை

மின்சாரம் மற்றும் உள்கட்டமைப்புத் துறைகளில் தொடர்ச்சியான பிரச்சினைகள் உள்ளன. இதற்கு தீர்வு அறிய ஆர்.பி.ஐ.யின் வங்கிகளின் வெளிக்கொண்டருதல் பிரிவு செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையை பார்வையிட்டோம். நாங்கள் இரு கால அளவுகளை பகுப்பாய்வு செய்தோம்: அதன்படி 2001 மார்ச் 31ஆம் தேதி வரையிலானது; மற்றும் 2009

மார்ச் முதல் 2013 மார்ச் வரை காலம் என பகுப்பாய்வு செய்யப்பட்டது. மார்ச் 2001 வரை பெரிய தொழில்கள், நடுத்தர தொழில்கள் மற்றும் வேளாண்மை மூலம் வங்கித் துறையின் மொத்த வாராக்கடன் பங்களிப்பு முறையே 21%, 15.8% மற்றும் 13.3% ஆக இருந்தது.

*Source: Muniappan (2002), RBI Deputy Governor at CII Banking Summit 2002 on April 1, 2002*

| Trend in Non Performing Assets | | |
|---|---|---|
| **Period** | **Average GNPA (in per cent)** | **Average NNPAs(in per cent)** |
| 1997-2001 | 12.80 | 8.40 |
| 2001-2005 | 8.5 | 4.2 |
| 2005-2009 | 3.1 | 1.2 |
| 2009-2013 | 2.6 | 1.2 |
| Mar 2013 | 3.4 | 1.7 |
| Sep 2013 | 4.2 | 2.2 |

Source: Reserve Bank of India

ரிலையன்ஸ், ஏ.டி.ஏ.ஜி. மற்றும் வீடியோகான் ஆகியவற்றை ஒதுக்கி வைத்தாலும், இந்திய வங்கி துறையில் முதல் 10 கடன் பெற்றவர்களில் நபர்களில் (பிந்தையது உள்கட்டமைப்பு மற்றும் சுரங்கத்தில் கணிசமாக ஆர்வம் கொண்டுள்ளது), மற்றவர்கள் முதன்மையாக உள்கட்டமைப்பு மற்றும் கனரக தொழில்களை கொண்டுள்ளனர். அடுத்து, தொழில்களுக்கு (மொத்தம்) மற்றும் விவசாயத்தில் 2009 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கு இடையே சொத்து விகிதங்கள் மொத்த வீழ்ச்சியடைந்ததாக நாம் கருதுகிறோம். 2009 மார்ச் மாதத்தில் தொழில்துறையின் அனைத்து கடன்களும் 10.2% சரிவுற்றன; இது 5.8% புள்ளிகளில் இருந்து மார்ச் 2013 இல் 16% ஆக அதிகரித்தது (2013 ஆம் ஆண்டிற்கு பிறகே அந்த நிலை மோசமாகிவிட்டது). விவசாயத்திற்காக, வங்கித் துறையின் 5.4% வெளிப்பாடு 2009 மார்ச் மாதம் குறைக்கப்பட்டது; இது 2013 மார்ச் மாதத்தில் 2.8% என 8.2% ஆக மோசமடைந்தது. விவசாயம் தொழிலில் பலவீனமான சொத்துக்கள் சதவீதம் குறைவாக உள்ளது என்பதை தரவுகள் தெளிவுபடுத்துகின்றன.

கடன் வழங்குவதில் வங்கிகள் விதிமுறைகளை பின்பற்றின: சிறிய தொழில் கடன் 11%, விவசாய கடன் 10% மற்றும் தொழில் கடன்கள் 7% என்று, புனேயில் உள்ள வங்கி மேலாண்மை தேசிய நிறுவனத்தில் பேசிய 2004 ஜனவரி 6 அன்று பேசிய இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் ஒய்.வி. ரெட்டி ஒப்புக்கொண்டார். இதன் பொருள், கடன் தரத்தை (ஒரு நிறுவனத்தின் கடன்மதிப்பு அல்லது இயல்பான அபாயத்தை தீர்ப்பதற்கான முக்கிய நிபந்தனை) பெரிய பெருநிறுவன கடன் பெறும் வங்கிகளால் வசூலிக்கப்படும் வட்டி விகிதங்கள், இதில் சம்பந்தப்பட்ட அபாயங்கள் காரணமாக மிகவும் குறைவு என்பதாகும்.

### கொள்கை எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கிறது?

நுகர்வோர் மீது விவசாயிகள் மற்றும் மானியங்கள் மீது கட்டுப்பாடுகள் மூலம் நுகர்வோருக்கு உணவுப் பொருட்களின் விலையை குறைக்க கொள்கை கவனம் செலுத்துகிறது. 2014 ஆம் ஆண்டு முதல் 2016 வரையிலான இந்திய விவசாயிகள் ஏற்றுமதி வரம்புகளின் காரணமாக சராசரி ஆண்டு வருவாய், அவர்கள் பெற்ற மானியங்களைக் கழித்த பின் ரூ.1.65 லட்சம் கோடி என, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் அறிக்கை தெரிவிக்கிறது.

இனி வளர்ச்சி இந்த மாதிரி காக்கக் கூடிய நிலை இல்லை என பல வல்லுநர்களும் கொள்கை வகுப்பாளர்களும் ஒப்புக் கொள்கின்றனர். முதலாவதாக, இந்தியா ஏற்றுமதியில் மட்டும் சார்ந்திருக்க முடியாது; உள்நாட்டு தேவைகளுக்கு அதன் முன்னேற்றத்தை அதிகரிக்க வேண்டும். இது, வருமான விநியோகம் ஒரு துறையில் இருந்து விலகிச்செல்லும் இந்தியாவின் தொழிலாளர் தொகுப்பில் 42% பணியிட உதவுவதில்லை. இரண்டாவதாக, விவசாயத்தொழிலை விட்டு அகதிகள் போல் வருபவரை நிர்வகிக்க நகரங்களால் முடியாததால், விவசாயம் இன்னும் உற்பத்தி மற்றும் ஊதியத்தைத் தர வேண்டும். மூன்றாவதாக, 2006 ம் ஆண்டு விவசாயிகள் குறித்த சுவாமிநாதன் / தேசிய ஆணைய அறிக்கையானது இந்தியாவின் உணவு பாதுகாப்பு இறக்குமதிகள் மூலம் பெற முடியாது என்பதைக் குறிப்பிடுகிறது. எனவே இது ஒரு ஆரோக்கியமான விவசாயத் துறைக்கான கட்டாயத்தை வலியுறுத்துகிறது. இறுதியாக, ஒரு நெறிமுறை பார்வையில் இருந்து பெருவணிகத்தை கவனிப்பது யார், பெருநிறுவன ஊக்குவிப்பாளரை போலில்லாமல், ஒரு முன்னிருப்பு நிகழ்வில் தனிப்பட்ட சொத்துக்களை இழக்க நேரிடும் அபாயங்கள் பெரிய தொழிலதிபரை கவனித்துக்கொள்வது போல் முக்கியம்.

மொத்தத்தில், விவசாய மற்றும் கார்ப்பரேட் துறையிலுள்ள கட்டுமானப் பிரச்சினைகள் சமமான அவசரத்துடன் கவனிக்கப்பட வேண்டும். விவசாய துறைகளை ஏமாற்றும் போது அதன் துயரங்களுக்கான கார்ப்பரேட் துறையுடன் இணைந்து செயல்படுவது என்பது, ஒரு நகரத்தில் எவர் ஒருவரும் வெற்றிபெற முடியாத ஒரு செய்முறையாக இருக்கிறது.

***(பிரசாத், குர்கானில் உள்ள மேலாண்மை மேம்பாட்டு கழக பேராசிரியர் மற்றும் பிளட் ரெட் ரிவர் நூலாசிரியர்; குப்தா, பொருளாதார வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட ஒரு வங்கியாளர்).***

---



## இது தான் அரசு அலுவலகத்தின் அலுவலக நடைமுறை... (நகைச்சுவை நெடுங்கதை)

ஒரு அரசு அலுவலகத்தின் பூட்டி வைக்கப்பட்டு இருந்த பதிவு அறைக்குள் (Record Room) ஒரு சின்ன இடைவெளி வழியாக ஒரு பாம்பு புகுந்தது. அவ்வலுவலக ஊழியர் ஒருவர் பார்த்து விட்டு, தனது கண்காணிப்பாளரிடம் நமது அலுவலகத்திற்குள் பாம்பு புகுந்து விட்டது என்று தெரியப்படுத்தினார். கண்காணிப்பாளரும், தனது மேல் அதிகாரியுடன் கலந்து ஆலோசிக்க நினைத்ததால் அவர் அலுவல் விஷயமாக ஒரு வாரம் வெளியூர் சென்றார்.

ஒரு வாரம் கழித்து மேல் அதிகாரி வந்தவுடன், கண்காணிப்பாளர் அவரிடம், கடந்த வாரம் தாங்கள் இல்லாத பொழுது நமது அலுவலகத்திற்குள் ஒரு பாம்பு புகுந்து விட்டது, அதனைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து உங்களிடம் ஆலோசிக்க வேண்டும் என்று கூறினார்.

மேலதிகாரியும், "சரி, அந்தப் பாம்பினைப் பிடிக்க வனத்துறைக்கு கடிதம் எழுதுங்கள்" என்று கூறிவிட்டார். கண்காணிப்பாளரும், பாம்பினைப் பிடித்து தர வனத்துறைக்கு கடிதம் எழுத, அங்கு இருந்து ஒரு வாரம் கழித்து பதில் வந்தது. "பாம்பினைப் பிடிக்கும் எங்கள் அலுவலக ஊழியர்கள் தற்சமயம் இல்லை, அவர்கள் ஒரு மாதம் பயிற்சிக்காக சென்று உள்ளனர். நீங்கள் ஒரு தனியார் பாம்பு பிடிப்பவரை வைத்து பிடித்துக் கொள்ளுங்கள்" என்று தெரிவித்து இருந்தார்கள்.

உடனே, கண்காணிப்பளாரும், அடுத்து ஒரு கடிதத்தை வனத்துறைக்கு எழுதினார், அதில் "அவ்வாறு நாங்கள் தனியாரை வைத்து பாம்பு பிடித்தால், அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் வனத்துறை மூலம் எங்களுக்கு தரப்படுமா ?" என்று கேட்டு இருந்தார். அதற்கு, "இல்லை, அவ்வாறு கொடுக்கப்பட மாட்டாது, நீங்களே அதற்கு உண்டான ஊதியத்தினை அரசிடம் இருந்து பெற்று கொடுங்கள்" என்று பதில் வந்தது.

உடனே, கண்காணிப்பாளர் வனத்துறையினர் அறிவுரையை மேற்கோள் காட்டி தலைமை செயலகத்திற்கு ஒரு கடிதம் எழுதினார்.அதில் இவ்வாறு பாம்பு புகுந்து விட்டது, அதனை பிடிப்பதற்கு உண்டான ஊதிய தொகையை தனி அரசு ஆணை மூலம் பட்ஜெட்டில் போட்டு தர வேண்டும் என்று கோரி இருந்தார். அதற்கு, தலைமை செயலகத்தில் இருந்து இருவரங்களில் ஒரு பதில் வந்தது, உங்கள் அலுவலகத்தில் இதற்கு முன்னர் இது போன்ற பாம்பு புகுந்த சம்பவம் நடந்து இருக்கிறதா ? என்று கேட்டு இருந்தார்கள். கண்காணிப்பாளரும், இல்லை, இதுதான் முதல் தடவை என்று பதில் எழுதினார்.

பின்னர் மேலும் இரு வாரங்கள் கழித்து தலைமை செயலகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் உங்களது பக்கத்து அலுவலகங்களில், அல்லது உங்கள் துறை சார்ந்த வேறு அலுவலகங்களில் இது போன்ற சம்பவம் நடந்து உள்ளதா? என கேட்டு இருந்தார்கள். அதற்கும் கண்காணிப்பாளர் "இல்லை" என்று பதில் அனுப்பினார்.

பின்னர், தலைமை செயலகத்தில் இருந்து பிற துறைகளில் இது போன்று நடந்து இருந்தால் அதனை விசாரித்து அனுப்ப கேட்டு இருந்தார்கள். கண்காணிப்பாளரும், அவ்வாறு தனக்குத் தெரியவில்லை, நீங்களே விசாரித்து பாம்பினைப் பிடிப்பதற்கு உண்டான கூலி தொகையை கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பின்னர், சில நாட்கள் கழித்து, தலைமை செயலகத்தில் இருந்து, பாம்பு என்றால் எத்தனை பாம்பு?

என்று தங்கள் கடிதத்தில் தெரியப்படுத்த வில்லை. அதனை தெளிவு படுத்துமாறு கூறி கடிதம் வந்தது. கண்காணிப்பளாரும் ஒரு பாம்பு என்று பதில் அனுப்பினார்.

பின்னர் அங்கிருந்து, அந்த ஒரு பாம்பினைப் பிடிக்க 200-ரூபாய் அரசு மூலம் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதாக அரசு ஆணை வந்தது. கண்காணிப்பாளரும், ஒரு பாம்பு பிடிப்பவரைக் கூப்பிட்டு அந்த பாம்பினைப் பிடியுங்கள், ரூ.200 தருகிறேன் என்று கூற, அவரோ பணம் கையில் வந்தால் மட்டுமே பாம்பு பிடித்து தருவேன் என்று கூறி விட்டார். உடனே, கண்காணிப்பளாரும், சரி ரூ.200 க்கான பட்டியல் தாருங்கள், நான் கருவூலத்தில் அதனை வாங்கிய பின்னர் தங்களை அழைக்கிறேன் என்று பட்டியலை வாங்கி தனது ஊழியர் மூலம் கருவூலத்தில் சமர்ப்பித்தார்.

ஆனால், கருவூலத்தில் ஒரு வாரம் கழித்து தாங்கள் இணைத்துள்ள அரசு ஆணையில் Section Officer கையெழுத்து உள்ளது. எங்களுக்கு Under Secretary கையொப்பம் போட்ட பிரதி வேண்டும் என்று பட்டியலை திருப்பி அனுப்பினார்கள். பின்னர், கண்காணிப்பாளரும், மீண்டும் தலைமை செயலகத்திற்கு கடிதம் எழுதி தங்களுக்கு Under Secretary கையொப்பம் போட்ட பிரதி வேண்டும் என்று கேட்டு வாங்கி இணைத்து அனுப்பினார். பின்னர் கருவூலத்தில், பட்டியலில் தனியாருக்கான GST விபரம் இல்லை, என்று இரண்டாம் முறையாக திருப்பி அனுப்பினர்.

கண்காணிப்பாளரும், GST-யுடன் கூடிய பில்லினை வாங்கி மூன்றாம் முறையாக சமர்ப்பித்தார். பின்னர், கருவூலத்தில், இந்த மாத சம்பளம் உங்களது அலுவலகத்தில் இன்னும் IFHRMS மென்பொருளில் சமர்ப்பிக்க வில்லை என்று கூறி அந்தப் பட்டியலை வாங்க மறுத்தனர். IFHRMS-ல் போடலாம் என்று நினைக்க, சர்வர் வேலை செய்ய வில்லை, உடனே விப்ரோ வை தொடர்பு கொண்டு கேட்க, அவர்கள் சர்வர் இரண்டு நாட்களுக்கு SHUT DOWN என்று கூறி விட்டார்கள். பின்னர் இரு நாட்கள் கழித்து கண்காணிப்பாளரும், உதவியாளர் உதவியுடன் அந்த மாத சம்பள பட்டியலை தயார் செய்து கருவூலத்தில் நான்காம் முறையாகக் சமர்ப்பித்தார்.

பின்னர், கருவூலத்தில், இந்த பாம்பு பிடிக்கும் கூலி பில்லினை IFHRMS-ல் போட்டீர்களா என்று கேட்க கண்காணிப்பாளர் இல்லை என்று கூற, இதனையும் நீங்கள் கண்டிப்பாக IFHRMS-ல் போட வேண்டும் என திருப்பி அனுப்பினர். பின்னர் கண்காணிப்பளார் அதனையும் IFHRMSல் போட்டு பில்லினை சமர்ப்பிக்க, இறுதியாக கருவூலத்தில் வாங்கிக் கொண்டனர்.

பத்து நாட்கள் கழித்து, கருவூலம் மூலமாக பணம் பாம்பு பிடிப்பவர் அக்கௌண்டில் Rs.200/- வர, அவர் பாம்பு பிடிக்க கிளம்பி வந்தார். வந்ததும் கண்காணிப்பாளரிடம், எந்த ரூம்? என்று கேட்க, அவரும் பதிவறையை கை காட்டினார். உள்ளே பாம்பு பிடிக்க சென்றவர், அந்தப் பாம்பினையும் பிடிக்காமல் வெறும் கையுடன் திரும்பி வந்தார்.

அவரிடம் அனைவரும் என்னாச்சு? என்று வினவ, அவரோ, நீங்கள் ஒரு பாம்பு பிடிப்பதற்கு தான் ரூ.200 கொடுத்தீர்கள், ஆனால் உள்ளே சென்ற பாம்பு குட்டி போட்டு பின்னர் அந்த குட்டிகளும் வளர்ந்து குட்டி போட்டு இப்போ 100 பாம்புகளுக்கு மேல் உள்ள இருக்கின்றன என்று கூற, கண்காணிப்பாளர் மீண்டும் முதலிருந்து ஆரம்பிக்கணுமே என்று தலைசுற்றி மயக்கம் போட்டு விழுந்தார்.

# 'சாதக' அறிக்கைக்கு லஞ்சம்: இளநிலை உதவியாளர் கைது

காஞ்சிபுரம், நவ.30–

தாம்பரத்தை சேர்ந்த சாப்ட்வேர் இன்ஜினியர்கள் கிருஷ்ண பிரசாத் அர்ச்சனா தம்பதியினர் இடையே ஏற்பட்ட குடும்பப்பிரச்னையில், கிருஷ்ண பிரசாத் மீது தாம்பரம் அனைத்து மகளிர் போலீசில் அர்ச்சனா புகார் கொடுத்தார். புகார் குறித்து தம்பதியினரிடம் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, மாவட்ட சமூகநலத் துறை அலுவலகத்துக்கு அந்த புகாரை போலீசார் அனுப்பினர்.

அதன் அடிப்படையில், சமூகநலத் துறை அலுவலகத்தில் இருந்து, கிருஷ்ண பிரசாத்திற்கு சாதகமாக விசாரணை அறிக்கை அளிக்க, சமூக நலத்துறை அலுவலகத்தில் லஞ்சம் கேட்டுள்ளனர். ஒரு லட்சம் ரூபாய் லஞ்ச பேரம் பேசி, 50 ஆயிரம் ரூபாய்க்கு இறங்கி வந்து, முதல் தவணையாக ரூ.25 ஆயிரம் கேட்கப்பட்டது. இதுகுறித்து, காஞ்சிபுரம் மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசில் கிருஷ்ண பிரசாத் புகார் கொடுத்தார்.

போலீசார் அறிவுரைப்படி, ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள சமூகநலத்துறையில் தொகுப்பூதிய இளநிலை உதவியாளராக பணிபுரியும் பிரேமா என்பவரிடம் கிருஷ்ணபிரசாத் நேற்று கொடுத்தார். பணத்தை அவர் வாங்கியபோது, அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் உடனே, பிரேமாவை கைது செய்தனர். சமூகநலத்துறை அலுவலகத்திலும் சோதனை நடத்தினர். தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

★★★★ திருச்சி 27–10–2021 7



திருச்சி மேற்கு தாசில்தார் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்திய போது எடுத்த படம்.

திருச்சியில் பரம்பரை சொத்தை பட்டா மாறுதல் செய்ய

# ரூ.50 ஆயிரம் லஞ்சம் வாங்கிய தாசில்தார் கைது

திருச்சி, அக்.27-

திருச்சியில் பரம்பரை சொத்தை பட்டா மாறுதல் செய்ய ரூ.50 ஆயிரம் லஞ்சம் வாங்கிய சிறப்பு தாசில்தாரை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.

**நிலவரி திட்ட சிறப்பு தாசில்தார்**

திருச்சி கே.கே.நகரை சேர்ந்தவர் சீனிவாசன். இவருக்கு திருச்சி கொட்டப்பட்டு பகுதியில் 2 ஏக்கர் நிலம் உள்ளது. பூர்வீக நிலமான இதனை அளவீடு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக திருச்சி மேற்கு தாசில்தார் அலுவலகத்தில் சீனிவாசன் மனு செய்து இருந்தார். ஆனால் நகர நிலவரி திட்ட சிறப்பு தாசில்தார் கோகுல் (வயது 42) என்பவர் நில அளவீடு செய்து பட்டா மாறுதல் செய்து தராமல் சீனிவாசனை கடந்த 2 மாதமாக அலைக்கழித்து வந்துள்ளார்.

**லஞ்சம்**

இது குறித்து சீனிவாசன் கேட்ட போது, பட்டா மாறுதல் செய்து தர ரூ.1 லட்சம் லஞ்சம் கொடுத்தால் வேலை நடைபெறும் என்று கூறி உள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத சீனிவாசன் திருச்சி லஞ்ச ஒழிப்பு போலீஸ் துணை சூப்பிரண்டு மணிகண்டனிடம் புகார் அளித்தார். இதனையடுத்து போலீசாரின் அறிவுறுத்தலின் பேரில் சீனிவாசன் நேற்று மாலை ரசாயன பவுடர் தடவப்பட்ட ரூ.50 ஆயிரத்தை லஞ்சமாக சிறப்பு தாசில்தார் கோகுலிடம் கொடுத்துள்ளார்.

**தாசில்தார் கைது**

அப்போது சிறப்பு தாசில்தார் கோகுல் அவரிடம் இருந்து பணம் பெறும்போது அங்கு மறைந்திருந்த இன்ஸ்பெக்டர் சக்திவேல் உள்ளிட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் அவரை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். இதனை தொடர்ந்து தாசில்தார் அலுவலகம் மற்றும் உறையூரில் உள்ள அவரது வீட்டிலும் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர். இந்த சோதனை நேற்று இரவு விடிய விடிய நடத்தப்பட்டது. இதில் முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. தொடர்ந்து கோகுலை விசாரித்து வருகின்றனர்.

ாணவர் சேர்க்கை:

ா காலியிடங்களை நிரப்புவது எப்படி?

சென்னை, அக்.27-

உயர்கல்வித்துறை முதன்மை செய
லாளர் தா.கார்த்திகேயன் வெளியிட்
- உயர்கல்வித்துறையின் கீழ் செயல்
அனைத்து அரசு, அரசு உதவிபெறும்
ில் மாணவர் சேர்க்கையில் மிகவும்
வன்னியர், சீர்மரபினர், இதரபிரிவினர்
நபர் இல்லாத நிலையில் ஏற்படும்
த்து சுழற்சி முறையில் நிரப்புவதற்கு
டி, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (வன்
ிட்டில் மாணவர் சேர்க்கை காலியி
த்தப்பட்டோர் (சீர்மரபினர்), மிகவும்
ய பிரிவுகளில் காத்திருப்பு பட்டியலில்
ப்படி நிரப்பப்பட வேண்டும். அதேபோல்,
னருக்கான 7 சதவீத இடஒதுக்கீட்டில்
ற்பட்டால், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
டோர் (இதர பிரிவு) ஆகியோருக்கும்,
வினருக்கான 2.5 சதவீதம் இடஒதுக்
டங்கள் இருந்தால் மிகவும் பிற்படுத்
டுத்தப்பட்டோர் (சீர்மரபினர்) ஆகியோ
டையில் இடங்கள் வழங்கி காலியி
ல் அவர் கூறியுள்ளார்.



மலர்

# லஞ்சம் வாங்கும் அதிகாரிகளை தூக்கில் போட்டால் என்ன?

## மதுரை ஐகோர்ட் நீதிபதிகள் கருத்து

மதுரை, நவ. 3– கொள்முதல் நிலையங்களுக்கு நெல் கொண்டு வரும் விவசாயிகளிடம் அதிகாரிகள் யாரும் லஞ்சம் வாங்கவில்லை என்று ஐகோர்ட் கிளையில் பதில் மனு தாக்கல் செய்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நிர்வாக இயக்குனர், 105 அதிகாரி மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் முரண்பட்ட தகவல் தெரிவித்தார். இதனால் கோபமடைந்த நீதிபதிகள், 'லஞ்சம் வாங்குபவர்களைத் தூக்கிலிட்டால்தான், லஞ்சம் வாங்குவது குறையும்' என்றனர்.

தமிழகத்தில் நெல் அறுவடை தொடங்கியுள்ள நிலையில், விவசாயிகள் டமிருந்து நெல் கொள்முதல் செய்ய போதுமான கொள் முதல் நிலையங்கள் இல்லை என்றும், போதுமான நெல் கொள்முதல் நிலையங்களை திறக்கக்கோரியும், சென்னையை சேர்ந்த சூரியபிரகாசம் ஐகோர்ட் கிளையில் மனுதாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் கிருபாகரன், ...

அறிக்கையைத் தாக்கல் செய்ய அரசுக்கு உத்தரவிட்டது. அந்த வழக்கு, நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நிர்வாக இயக்குனர் சார்பில் ஒரு பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறியிருந்த விஷயம்:

தமிழகத்தில் 862 கொள்முதல் நிலையங்கள் உள்ளன. தேவையான இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கொள்முதல் நிலையங்களில் அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என் பது தவறான தகவல். அதிகாரிகள் முறைகேடுகளில் ஈடுபடுவதை கண்காணிக்க 6 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 105 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதில் மனுவில் கூறியிருந்தார்.

பதிலே முரண்பாடு

இந்த பதில் மனுவைப் படித்த நீதிபதிகள் கிருபாகரன், ...

பின்னர் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறியதாவது:

நுகர்பொருள் வாணிப கழகத்தின் அதிகாரி தாக்கல் செய்த பதில் மனுவில், 'கொள்முதல் நிலையங்களில் அதிகாரிகள் லஞ்சம் வாங்குவது தவறான தகவல்' என்று குறிப்பிட்டுள்ளார். அடுத்த வரியில் 'ஊழல் அதிகாரிகள் கண்காணிக்க குழு அமைத்து முறைகேடில் ஈடுபட்ட 105 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்கிறார். முறைகேடு நடக்காவிட்டால், 105 அதிகாரிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்னது? இதுபோன்ற தவறான தகவலை கோர்ட்டில் தெரிவிக்கும் அதிகாரிகள் நேரில் ஆஜராக வேண்டியிருக்கும்.

விவசாயி வேதனை

விவசாயிகள், இரவுபகலாக கண்விழித்து, உழைத்து, பாம்புக் கடி வேதனைகளை அனுபவித்து, சாகுபடி செய்து நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வந்தால், அங்கு வாங்குவதற்கு வக்கில்லாமல், விவசாயிகளிடம் லஞ்சம் ...



தகவலறியும் சட்டத்தில் பதிலளிக்காத

# பொதுப்பணித்துறை அதிகாரிக்கு ரூ.50 ஆயிரம் அபராதம்

## மாநில தகவல் ஆணையர் அதிரடி

தென்காசி, நவ. 24: பாசன வசதி குறித்து தகவல் அறியும் உரிமைசட்டத்தின்கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு 30 நாட்களுக்குள் பதில் அளிக்காத பொதுப்பணித் துறை அதிகாரிக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து தகவல் ஆணையர் உத்தரவிட்டார்.

தென்காசி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று மாநில தகவல் ஆணையர் பிரதாப் குமார் மேல்முறையீட்டு மனுக்களின் மீது விசாரணை நடத்தினார். பின்னர் மாநில தகவல் ஆணையர் பிரதாப் குமார் நிருபர்களிடம் கூறியதாவது:

கொரோனா ஊரடங்கு காலத்திற்கு பிறகு தற்போது மனுதாரர்களின் இரண்டாவது மேல்முறையீடு மனு மீது முதன்முறையாக தென்காசி மாவட்டத்தில் விசாரணை நடந்தது. மொத்தம் 50 மேல்முறையீட்டு மனுக்களின் மீது விசாரணை நடைபெற்றது. காலையில் 25 மனுக்களும் மதியத்திற்கு பிறகு 25 மனுக்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்படும் கேள்விகளுக்கு 30 நாட்களுக்குள் பதில் அளிக்க வேண்டும். அளிக்கவில்லை எனில் 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

மேலும் நாள் ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் அபராதம் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும். விசாரணை மீதான தீர்ப்புகள் அனைத்தும் இரண்டு நாட்களில் இணையதளத்தில் தெரிவிக்கப்படும்.

கடைய நல்லூரில் இணைய அறிவு இருந்தால் இணையத்தில் தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறப்பட்டபதிலுக்கு கண்டனம் தெரிவித்து இருக்கிறோம். தகவல் அலுவலர் பட்டா உள்ளிட்ட விவரங்கள் குறித்த கேள்விகளுக்கு ஆன்லைன் மூலம் தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறக்கூடாது. அதற்கும் கண்டனம் தெரிவித்து இருக்கிறோம்.

நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும் கேள்விகளுக்கு பதிலளிக்க மறுக்கக்கூடாது நீதிமன்ற உத்தரவு ஏதாவது இருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ராஜுவ ரகசியங்கள், அமைச்சரவை கூட்ட ஆலோசனைகள் உள்ளிட்டவை தவிர மற்ற அனைத்துமே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்விகள் கேட்கலாம். பிஐஓ விசாரணையில் கூட மனுதாரர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் தரலாம் என்று கூறியிருக்கிறோம்.

மாநில தகவல் ஆணையத்தில் இருந்து சென்னை நந்தனம் மவுண்ட் ரோடு அண்ணா சாலையில் ஒரு ஏக்கர் நிலம் வழங்கி 30 முதல் 40 கோடி ரூபாய் செலவில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் அல்லது ஜனவரியில் பயன்பாட்டுக்கு வரும். தமிழகத்திலேயே மாநில தகவல் ஆணையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டப்பட்டுஉள்ளது குறிப்பிடத்தக்கது.

வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை ஆகியதுறைகள் மீதான இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்கள் 50 மனுக்கள் விசாரிக்கப்பட்டது இதில் வருவாய்த்துறை மற்றும் ஊரகவளர்ச்சித் துறையின் 90 சதவீத பதில் திருப்திகரமாக உள்ளது. 4 மனுக்கள் மீது மட்டும் பதில் அளிக்கப்படவில்லை. அவை குறித்து 5 முதல் 10 நாட்களுக்குள் பதிலளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் நாளொன்றுக்கு 250 ரூபாய் வீதம் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும்.

திசையன்விளையை சேர்ந்த சதாசர் பாலாஜி என்பவர் கடந்த 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் நம்பியாறு பாசன வசதி குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு பொதுப்பணித்துறை சார்பில் உரிய பதில் அளிக்கவில்லை. அவர் 4 முறை முதலமைச்சருக்கு மனு செய்திருக்கிறார். ஆளுநருக்கு மனு கொடுத்திருக்கிறார். பொதுப்பணித்துறை தலைமை பொறியாளருக்கு மனு செய்திருக்கிறார்.

மொத்தம் 23 மனுக்கள் தாக்கல் செய்திருக்கிறார். ஆனால் அவருக்கு உரிய பதில் கிடைக்கவில்லை என்று இரண்டாவது மேல்முறையீடு செய்திருந்தார். பலமுறை அலைந்தும், செலவு செய்தும், மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார். அது குறித்து விசாரிக்கப்பட்டு தென்காசி மாவட்டம் சிற்றாறு வடிநிலக்கோட்ட பொதுப்பணித்துறையின் தலைமை வரைபடவியலாளர் உதயகுமாருக்கு பிரிவு 20 (1)ன் கீழ் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் பிரிவு 20 (2)ன் கீழ் அவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தென்காசியில் மாநில தகவல் ஆணையர் பிரதாப் குமார் பேட்டி அளித்தார்.



விளைநிலத்திற்கு மெய்த்தன்மை சான்று அளிக்க

# ரூ.20 ஆயிரம் லஞ்சம் வாங்கிய விஏஓ உள்பட 3 பேர் சிக்கினர்

## நம்பியூர் தாலுகா அலுவலகத்தில் பரபரப்பு

கோபி, நவ.13: கோபி அருகே உள்ள கூடக்கரை கிராமத்தில் விவசாயபூமிக்கு மெய்தன்மை சான்று வழங்க ரூ.20 ஆயிரம் வாங்கிய விஏஓ உள்பட 3 பேர் சிக்கினர்.

ஈரோடு மாவட்டம் கோபி அருகே உள்ள கூடக்கரையை சேர்ந்தவர் ரத்தினசாமி (54). இவரது 2.5 ஏக்கர் விவசாய நிலத்திற்கு மெய்த்தன்மை சான்று கேட்டு நம்பியூர் தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்தார். சான்று வழங்க எலத்தூர் விஏஓ ராம்ஜி (33) என்பவர் ரூ.50 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத ரத்தினசாமி இதுகுறித்து ஈரோடு லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் அளித்தார். அவர்கள் நேற்று ரசாயனம் தடவிய ரூ.20 ஆயிரத்தை ரத்தினசாமியிடம் கொடுத்தனர். ரத்தினசாமி அந்த பணத்தை விஏஓ ராம்ஜிடம் இருகாலூர் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே வைத்துகொடுத்துள்ளார். அவர் பணத்தை பெற்று புரோக்கர் முத்துகுமாரிடம் (35) கொடுத்த போது லஞ்ச ஒழிப்பு போலீசார் மடக்கிபிடித்தனர். விசாரணையில், மெய்த்தன்மை சான்று வழங்க லஞ்சம் வாங்க சொல்லி துணை வட்டாட்சியரான அழகேசன் (36), கூறியதாக விஏஓ ராம்ஜி தெரிவித்தார். அதன்பேரில், துணை வட்டாட்சியர் அழகேசன் மற்றும் புரோக்கர் முத்துகுமார், விஏஓ ராம்ஜி ஆகியோரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முத்துகுமாரின் தந்தை விஜயகுமார் கிராம நிர்வாக உதவியாளராக பணியில் இருந்த போது உயிரிழந்த நிலையில் தற்போது அரசு வேலைக்கு காத்திருந்த போது முத்துகுமார் பிடிபட்டுள்ளார். லஞ்சம்வாங்கியதாக பிடிபட்டுள்ள விஏஓ ராம்ஜி நம்பியூர் வட்டார கிராம நிர்வாக அலுவலர் சங்க தலைவராக உள்ளார். தொடர்ந்து 3 பேரிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது.

நம்பியூர் அருகே லஞ்ச ஒழிப்பு துறை சோதனையில் சிக்கிய அழகேசன், முத்துகுமார், ராம்ஜி.

தினகரன் Sat, 13 November 2021 https://epaper.dinakaran.com/c/64308057

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- டிசம்பர்-'2021**

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

உன் பையன் எப்படி கட்டைவிரல
சப்புற பழக்கத்தை விட்டான்?

பெரிய விஷயம் இல்ல... இடுப்புல
நிக்காத தொள தொள ஜட்டி போட்டு
விட்டேன்.... அப்பப்ப ஜட்டி நழுவாம
இருக்க இரண்டு கையாலையும்
பிடிச்சு பிடிச்சு கட்டைவிரல்
பழக்கத்தை மறந்துட்டான்.!!

இப்படியே விலைவாசி,
வேலையின்மை, ஏழ்மை,
ஏற்றத்தாழ்வு எல்லாம் மக்கள்
மறக்கணும்னா....
ஆண்டாள், அயோத்தி, பசுவதை,
பத்மாவதி, பாகிஸ்தான், தலாக்,
ஜல்லிக்கட்டு, டோல்கேட், என்று
மாற்றி மாற்றி தொள தொள
ஜட்டியா மக்களுக்கு மாட்டி
விட்டா... மக்கள் அனைத்தையும்
மறந்து ஜட்டியப் பிடிச்சுக்கிட்டு
அலைவாங்க.....!!!!👍

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர்: ஜி கோவிந்தசாமி**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 11 Aug 2021
Due to corona published online)

**பெரியோரை வியத்திலும் இலமே**
**சிறியோரை இகழ்தலும் அதனினும் இலமே!**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,** AYANAVARAM, CHENNAI-23

**Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan**

இலஞ்சம் கொடுக்காதீர்! கொடுக்க விடாதீர்!! இலஞ்சம் வாங்காதீர்! வாங்க விடாதீர்!